**பலங்கொட நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பலங்கொட நகர சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர கட்டளை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(1) உப பரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் பலங்கொட நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கானஅடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டிற்குரிய முத்திரை கட்டணம் ரூபா 9,882,204 ஏனைய வருமானங்களிற்கு செலவு வைத்ததன் காரணமாக ஆண்டின் செயற்பாட்டு வருமானம் அப் பெறுமானத்தால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய பெறுமதி தவறுதலாக ஏனைய வருமான கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | கடந்த ஆண்டு வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நடைமுறையல்லாத சொத்துக் கொள்வனவு மற்றும் மேன்படுத்தல் கூட்டுத்தொகை ரூபா 28,058,385 ஆன போதும், அதனை ரூபா 29,353,432 ஆக மூலதனமாக்கி இருந்ததால் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதனத்திற்கு வருமானத்தால் பங்களிக்கும் கணக்கின் மீதி ரூபா 1,295,047 கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆண்டில் இத் தவறை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கூடுதலாக மூலதனமாக்கியுள்ள பெறுமதியை குறித்த சொத்துக் கணக்கிலிருந்து அகற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலையான வைப்புக்களிற்காக கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 240,646 மாற்றப்பட முன்னர் வைப்புக் கணக்கிற்கு வரவு வைத்த காரணத்தால் 2020 திசெம்பர் 31 திகதியன்று நிலையான வைப்பு மீதி அப் பெறுமானத்தால் கூட்டிக் காட்டப்பட்டதுடன் நடைமுறை சொத்துக்கள் சமமான பெருமதியால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இவ்வாறான தவறுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாக. | நிலையான வைப்பு வட்டி மாற்றப்பட்ட பின்னர் வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்க வேண்டும். |
| (ஈ) | காசு மாற்றல் கணக்கில் ரூபா 9,307,943 ஆன மீதியை மீளாய்வாண்டிலும் இனங்கண்டு தீர்த்திருக்கவில்லை. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது இம் மீதியில் கனிசமான தொகையை தீர்க்க எதிர்பார்ப்பதாக. | காசு மாற்றல் கணக்கின் மீதியை இனங்கண்டு தீர்க்க வேண்டும். |
| (உ) | நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்ய செலவிட்ட ரூபா 41,078 இனை மீண்டுவரும் செலவாக கணக்கீடு செய்திருந்த காரணத்தால் ஆண்டின் செயற்பாட்டு மிகை அப்பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டது. | 2021 ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வேலை கடன்கொடுனர் மீதி ரூபா 104,817 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு நிதிக்கூற்றுக்குகள் தயாரிக்கும் போது செம்மையாக்க நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 23,422,086 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 1,604,413 ஆனது. கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஏனைய வருமானம் ரூபா 19,999,221 இனால் அதிகரித்துள்ளமை அவ்வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாகவிருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 4,273,339 ஆன நிலுவை வீதவரியை அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அதற்குரிய காலப்பகுப்பாய்வையும் தயாரித்திருக்கவில்லை. | 2019 ஆண்டில் ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் மற்றும் 2020 ஆண்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று காரணமாக வீதவரி அறவிடும் சதவீதம் குறைந்துள்ளதுடன், கனணி | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வேலைத் திட்டத்தை மேன்படுத்தி காலப்பகுப்பாய்வை தயாரிக்க எதிர்காலத்தில் திட்டமிட்டுள்ளதாக. | |

(ஆ) வாடகை

---------------

| | | |
|---|---|---|
| மொத்தம் வர்க்க மீட்டர் 38.43 ஆன இம்பீரியல் முன்பாக 14 கடையறைகளிற்காக 06 மாதம் முதல் 29 மாதகாலமாக அறவிடப்படாது காணப்படும் நிலுவை வாடகை ரூபா 199,250 இனை 2021 ஏப்ரல் வரையும் அறவிட்டிருக்கவில்லை. அக்கடையறைகளின் குத்தகை வாடகையை 05 வருடங்களுக்கு ஒரு முறை திருத்த சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அவற்றை நடாத்திச் செல்லும் 14 நபர்களுடன் எழுத்து மூல உடன்படிக்கையிற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவற்றை நடாத்திச் செல்பவர்களால் சிறிய இடஅளவில் தற்காலிகமாக நிர்மாணித்துள்ள சிறிய கடையறைகளாகையால், நகர சபையினால் அக் கடையறைகளிலிருந்து நடை பாதை வியாபாரிகளிடமிருந்து அறவிடும் கட்டணத்தை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த வாடகையொன்றை அறவிடுகிறது. மேலும், அக் கடையறைகளின் உரிமையை உறுதி செய்ய சபைக்கு இயலாதுள்ளதால் எழுத்து மூல உடன்படிக்கை கைச்சாத்திட முடியாதுள்ளதாக. | எழுத்து மூல உடன்படிக்கை கைச்சாத்திட மற்றும் நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

--------------------------------------------------------

| | | |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 445,326 இனை 2021 மார்ச் வரையும் அறவிட்டிருக்காததுடன், 2020 மே முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரியதாக அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை 2021 மார்ச் வரை இனங்கண்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் மாகாண சபையிலிருந்து கிடைக்காததுடன், எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

நகர சபை அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**3.1 செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்மான 05 அரச இல்லங்கள் தொடர்பாக சிக்கன வாடகை அறவிடப்படுவதுடன் அச் சிக்கன வாடகையை 2010 ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்திருக்கவில்லை. 2010 ஆண்டில் மேற்கொண்டிருந்த மதிப்பீட்டில் மாதாந்தம் ரூபா 2,000 ஆன சிக்கன வாடகை அறவிட வேண்டுமென குறிப்பிட்டிருந்த அரச இல்லமொன்றிற்கு 2013 திசெம்பர் வரை மாதாந்தம் ரூபா 1,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் 2014 ஆண்டு முதல் 1,500 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக சபைக்கு இழக்கப்பட்டிருந்த வாடகை வருமானம் ரூபா 78,000 ஆனது. | சபையின் அரச இல்லங்களை மதிப்பிட்டு, மதிப்பீட்டு பெறுமதி தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் 2013.11.30 திகதிய சபை தீர்மானம் பிரகாரம் ரூபா 1,500 ஆன மாதாந்த வாடகையை அறவிட தீர்மானித்துள்ளதால் அத் தீர்மானத்தின் மீது வாடகை அறவிட நடவடிக்கை எடுத்ததாக. | தாபன விதிக் கோவை ஏற்பாடுகள் பிரகாரம் வீட்டு வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |